KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.43

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

சு. தமிழ்ச்செல்வி சிறுகதையும் சமூக வாழ்வியலும்

S. Tamilselvi: Short Stories and Social Life

Dr. S. Brindha[1,*], Dr. C. Kurinji[1]

[1] Assistant Professors, Department of Tamil, Centre for Tamil Research, Ganesar College of Arts and Science (Affiliated to Bharathidasan University), Melasivapuri, Pudukkottai, Tamil Nadu, India.

***Corresponding author:** Dr. S. Brindha, brindhainiyan@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
KIJTS-2026-0022

Peer review
Double-blind peer review

Keywords
Society
Social Life
Culture
Feminism
Family
Literary Creation
Folklore.

ABSTRACT

Literature not only reflects human thoughts but also identifies and portrays various aspects of people's social life. In the contemporary literary context, fiction has a significant impact on society. Scientific advancements in the modern era have brought about remarkable changes in human life. The effects of these changes are reflected in various domains, including literature, politics, society, language, culture, and gender. Dominant ideologies often establish themselves as superior and sacred, thereby functioning as instruments of power and authority within society. The writings of S. Tamilselvi reveal and critically examine these social structures and power relations. Through her fiction, she explores the problems encountered by women in their everyday lives and highlights the social realities underlying these issues. This article examines how S. Tamilselvi's short stories portray women's lived experiences, social challenges, and the possibilities of addressing these issues within the Tamil social and literary context.

How to cite this article: Dr. S. Brindha, & Dr. C. Kurinji (2026). சு. தமிழ்ச்செல்வி சிறுகதையும் சமூக வாழ்வியலும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03). https://doi.org/10.63300/kijts603112026.43
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் சே. பிருந்தா & முனைவர் சி. குறிஞ்சி

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ் உயராய்வு மையம், கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலசிவபுரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் மனிதனது சிந்தனைகளைப் பிரதிபலிப்பதாக இருப்பதோடு, மக்களின் வாழ்வியல் சார்ந்த கூறுகளை அடையாளம் காட்டுவனவாகவும் உள்ளன.

இன்றைய நவீன இலக்கியச் சூழலில் புனைகதைகள் சமூகத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மனித வாழ்வில் பல்வேறு வியக்கத்தகு மாறுதல்களை நவீனயுகத்தின் விஞ்ஞான அறிவு உண்டாக்கியுள்ளது. இவற்றின் எதிரொலியானது இலக்கியம், அரசியல், சமூகம், மொழி, பண்பாடு, பாலினம் எனப் பல்வேறு நிலைகளில் விரிந்தும், மேலாதிக்கப் பண்புகளால் உன்னதமானதாகவும், புனிதமாகவும் உருக்காட்டி அதிகார நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இதனை அடையாளம் காட்டித் தருவதாக சு. தமிழ்ச்செல்வி புனைவுகள் உள்ளன. பெண்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சிக்கல்களைத் தமது புனைவுகளில் கையாண்டு, அச்சிக்கல்களுக்குத் தீர்வு கூறும் புனைவுகள் தமிழ்ச்சூழலில் வெளிவந்துள்ளதனை இக்கட்டுரை விளக்கிச் செல்கின்றது.

கலைச்சொற்கள்

சமூகம், வாழ்வியல், பண்பாடு, பெண்ணியம், குடும்பம், படைப்பு, நாட்டுப்புற இலக்கியம்.

முன்னுரை

தமிழில் வெளிவந்த படைப்புகள் குடும்பம், நிறுவனம், அரசியல், பொருளாதாரம், கருத்தியல், கலாச்சார நிலைகளிலும் தூர விலக்கி வைக்கப்பட்டுள்ள பெண்களின் வாழ்வியலைக் கவனத்தில் கொள்ளவில்லை. இன்றைய நவீன யுகத்தில் பெண்களது வாழ்வியல் முறைகள், அவர்களின் உணர்வு, பழக்க வழக்கங்கள் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சமூகச் சிக்கல்கள் போன்றவற்றை உள்வாங்கி சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகள் படைக்கப்பட்டுள்ளன. இன்றைய நவீன இலக்கிய உலகிற்கும் சமுதாய மாற்றத்திற்கும் பயன்பெறும் வகையில் அவற்றை ஆராய்ந்து அதன் வழியாகப் பெண்களது சமூகத்திற்கும் தமிழ் இலக்கிய ஆய்வு வளர்ச்சிக்கும், பெண்களது முன்னேற்றத்திற்கும் தேவையான பங்களிப்பை வலியுறுத்தும் வகையில் இவ்வாய்வானது பயன்பாடு உடையதாக அமையும்.

சமூகம் வரையறை

சமூகமும் வாழ்வியலும் என்பது மனிதர்களின் கூட்டு வாழ்க்கை, கலாச்சாரம், உறவுமுறை மற்றும் அன்றாட வாழ்க்கை முறைகளைக் குறிக்கும் ஒரு பரந்த கருத்தாகும். சமூக வாழ்வியலின் முக்கிய கூறுகள் உறவுப் பிணைப்புகள்: குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூகத்தினருடன் மனிதர்கள் உருவாக்கும் தொடர்புகள் சமூக வாழ்க்கையின் அடிப்படையாக அமைகின்றன. பண்பாடும் ஒழுக்கமும்: ஒரு சமூகத்தின் பாரம்பரியம், நன்னமதிப்புகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அதன் வாழ்வியலைத் தீர்மானிக்கின்றன. தொழில்நுட்ப மற்றும் நவீன மாற்றங்கள்: தற்காலத்தில் உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதர்களின் உணவு முறை, சிந்தனை மற்றும் வாழ்வியல் முறைகள் பெரிதும் மாறியுள்ளன.கூட்டு வாழ்க்கை: சமூக ஒழுங்கினைப் பேணவும், அமைதியான வாழ்க்கையை உறுதிப்படுத்தவும் கூட்டு வாழ்க்கை முறை அவசியமாகிறது.

“சமூகம் வர்க்கங்களாகப் பிளவுபடாத பண்டையக் காலக் கட்டத்தில் கலையும், இலக்கியமும், மக்களோடும் மக்கள் வாழ்வோடும் இரண்டறப் பின்னிக் கிடந்தன. அவை மக்களின் இன்பத்திலும், துன்பத்திலும், பிறப்பிலும், இறப்பிலும், ஆடலாக, பாடலாக, ஓவியமாக வெளிப்பட்டன. தன்னைச் சூழ்ந்து இருந்த இயற்கையை வெற்றி கொண்டு மனிதன் வளர்ச்சி அடையத் துவங்கிய போது மானுட சமூகமானது உடல் உழைப்பாளர்கள், அறிவு உழைப்பாளர்கள் என்னும் இரண்டு பிரிவினரைக் கொண்டதாகப் பிளவுபட்டது. அறிவு வெளிப்பாடே படைப்பிலக்கியங்களில் ஒன்றான எழுத்திலக்கியம் ஆகும். இவ்வெழுத்து இலக்கியம் மக்களிடம் இருந்து விலகிச் சென்றன. இவை உழைக்கும் மக்களைப் பற்றிப் பேசவில்லை. மக்களுக்காகவும் படைக்கப்படவில்லை. மக்களால் படிக்கப்படவில்லை. சமூகத்தில் மேல் தட்டில் இருக்கின்ற சிறுபான்மையோர் சொத்தாக இவை ஒதுங்கிவிட்டன. அவர்களின் வாழ்க்கையையும் அருமை பெருமைகளையும் ஆசாபாசங்களையுமே முதன்மையாக இவை வெளியிட்டன. நாட்டுப்புற இலக்கியங்கள் மட்டுமே மக்கள் இலக்கியமாக தொடர்ந்து நிலவி வந்தன.” (சு. சண்முகசுந்தரம், பெண்ணியம். ப. 82).

பெண்ணியச் சிந்தனைகள்

நீண்ட பாரம்பரியம் உடைய தமிழ்க்கவிதை காலத்துக்குக் காலம் மாறுதலடைந்து சமூகத்தின் அனுபவ வெளிப்பாடுகளைப் பாடுபொருள் ஆக்கியுள்ளன. சமூக மாற்றத்தில் பெண்ணின் நிலையும், பெண்ணின் அனுபவங்களும் ஓரளவு பதிவு செய்யப்பட்டுள்ளன. நவீன இலக்கியங்களில் பெண்களின் இருத்தலை உரக்க உரைப்பதாகவே உள்ளது. பெண்களின் துயரங்களையும் அவற்றிலிருந்து எழும் வேகத்தையும், வேட்கையையும் கோபத்தையும் இலக்கியம் பிரதிபலிக்க வேண்டும். பெண்களை அடிமைப்படுத்துகிற மதிப்பீடுகளை, அறங்களை உதறிவிட்டு, விடுதலைக்கான பார்வை விசாலமாக்கப்பட வேண்டும். அடக்குமுறைகளை மீறக்கூடிய, எதிர்க்கக் கூடிய கோபமே சிறந்த பெண்ணிய இலக்கியம் உருவாக வழிவகுக்கும்.

இன்றைய உலகில் பெருகிவரும் கருத்தாக்கங்களில் பெண்ணியச் சிந்தனையும் குறிப்பிடத்தக்கது. பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளும் கருத்துப் போக்குகளும் மாறவேண்டும் என்ற எண்ணத்தோடு பேசுவதும், எழுதுவதும், போராடுவதும் பெண்ணியக் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சமுதாயம் குறித்த புதிய தேடல் என்பது பெண்ணின் பரிமாணத்தை உள்ளடக்கியது. பெண் மதிக்கப்படும் பொழுது சமூகம் மேம்படும். ஏனென்றால் ஒரு சமூகத்தின் இயக்கத்திற்குப் பெண்ணின் பங்களிப்பும் அவசியமாகிறது. பெண்களைப் புறம் தள்ளி எந்த ஒரு வளர்ச்சியும் கிடையாது.

பெண் என்பவள் இயற்கைக்கு இணையாக ஒப்பிடப்படுபவள். இயற்கையானது எப்படிச் சமூகத்திற்குப் பயன்படுகிறதோ அதைப் போலப் பெண்ணும் சமூகத்திற்குப் பயன்படுகிறாள். அதனால்தான் பெண்ணும் இயற்கையும் ஒன்று எனக் கூறுகின்றனர். பெண்கள் மேன்மை அடைய வேண்டும் என்பதற்காக உலகம் முழுவதும் பெண்ணிய

இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தமிழகத்திலும் தந்தை பெரியார், சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியபோது சாதிய ஒழிப்புடன், பெண்ணியச் சிந்தனைகளையும் வலுவாக முன்வைத்தார். சாதி ஒழிப்பு, பெண் விடுதலை இவை இரண்டும்தான் பெரியாரின் செயல்பாடுகளுக்கான முக்கியமான அடித்தளங்கள் என்றே சொல்லலாம்.

தமிழ்ச்செல்வி சிறுகதையில் சமுதாயவியல்

தொம்பா சிறுகதையில் தொம்பா என்னும் பெண்பிள்ளையைப் பற்றியதாக அமைந்துள்ளது. இலட்சுமி என்ற தனது இயற்பெயர் மறந்து இப்பெயரே நிலைத்து விட்டது அப்பெண்ணிற்கு. அவளின் வயிறு சிறுவயதில் பெரியதாக இருந்ததன் காரணத்தால் தொம்பா என அழைக்கப்பட்டாள். திருமண வயதிலும் கூட அவ்வாறே அழைக்கப்பட்டாள். இச்சிறுகதை மிக இயல்பாக வாழ்க்கையை வாழும் மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக்காட்டுகிறது. மக்களின் எதார்த்த நிலையினை எடுத்துக்காட்டுகிறது. திருமணம் முடிந்து தமது குடும்ப வாழ்வில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுக்கிறாள். கணவன் குடிகாரனாக இருக்கிறான். மாடுகள் இருப்பதால் அதில் கிடைக்கும் பாலினை விற்று கிடைக்கும் வருவாயில் அவள் தன் அன்றாட வாழ்வினை ஓரளவிற் சமாளித்து வந்தாள்.

தொம்பாவின் மாடுகள் ஒருநாள் காணமல் போய் விடுகிறது. காணாமல் போனதனைத் தன் கணவனிடம் கூறுகிறால். அதனைத் தான் விற்று விட்டதாகக் கூறுகிறான். எதற்கு விற்றுவிட்டாய் எனக் கேட்டதற்குச் சாராயக்கடை வைக்கப்போவதாகச் சொன்னான். இதனைத் தொம்பா வெளியில் யாரிடமும் சொல்ல முடியாமல் வேதனைப்படுவதை இக்கதையின் வழி அறிய முடிகிறது.

இச்சமூகத்தில் ஆண்கள் சரியில்லை என்றாலும் பெண் தனது உழைப்பின் மூலம் குடும்பத்தினை நடத்தி வருகிறாள். இருந்தும் பெண்களுக்கு ஆண்கள் வேண்டாத தொல்லைகள் கொடுத்து வருவதனை யாரிடமும் சொல்ல முன் வராதவளாக இருக்கும் நிலையானது பிறரிடம் கூறினாலும் அதனால் என்ன பயன் கிடைக்கப் போகிறது. ஆண்கள் எடுக்கும் முடிவிற்கே இச்சமூகம் சரி எனக் கூறும் என்பதனை மனதில் நினைத்தே இத்தகைய முடிவினை எடுத்திருக்க வேண்டும் என்பது இப்புதினத்தில் மறைந்திருக்கும் கருத்தாகும்.

வேளாண்மைக் கூலியாக இருக்கும் பெண்களின் நிலை எவ்வகையான துன்பத்தினை எல்லாம் அடைவார்கள் என்பதனை ‘ஈரம்’ என்ற சிறுகதை எடுத்துக்காட்டியுள்ளது. தலைக்குத் தேய்ப்பதற்குத் தேங்காய் எண்ணெய் கூட இல்லாத வறுமையான சூழலை இச்சிறுகதையின் வழி அறிய முடிகிறது. குடும்பத்தில் உள்ள வறுமையினை ஒழிக்க வேண்டும் என்பதற்காக வேதம்மாள் எவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்து குடும்ப வறுமையினை நீக்க்குகிறாள் என்பதனை இச்சிறுகதை வழி அறிய முடிகிறது. பெண் படுகின்ற சிக்கல்களை இச்சிறுகதையில் காண முடிகிறது.

’வதம்’ என்னும் சிறுகதை ஒரு ஊமைப் பெண்ணின் வாழ்க்கையை விளக்குவதாக அமைந்துள்ளது. சிறுவயதில் ஏற்பட்ட காய்ச்சலில் வாய் நரம்பில் ஏற்பட்ட பாதிப்பால் பேச முடியாமல் போகிறது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி ஊமைப் பெண்ணை ஊரில் உள்ள இளைஞர்கள் இணைந்து கற்பழித்து விடுகின்றனர். அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டிய ஊர் பஞ்சாயத்து அபராதம் மட்டுமே விதித்து அவர்களை விடுதலை செய்கிறது. அப்பெண்ணின் சூழ்நிலையில் இருந்து பார்க்காமல் ஆண்களைக் காப்பாற்றும் நொக்கத்துடனே பஞ்சாயத்து முடிவு எடுத்திருப்பதனைக் காண முடிகிறது. சமூகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை, அவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் ஆபத்து இருந்து வருகின்றது என்பதனை இதன் வழி அறிய முடிகிறது. சமூகத்தில் பெண்ணின் மீதான பார்வை எவ்வாறு இருக்கின்றது என்பதனை இச்சிறுகதை மூலமாக வெளிப்படுகின்றது.

“வாய்க்குள் துணி வைத்து அழுத்தியதில் திக்குமுக்காடிய ஊமை மயங்கி விழுந்து இருட்டும்வரை அங்கேயே கிடந்தாள். பின் மயக்கம் தெளிந்து எழுந்து அழுதுகொண்டே வீட்டிற்கு வந்தாள். வெளியூர் போய்விட்டு அப்போதுதான் வந்து சேர்ந்திருந்தாள் ராசாமணி. தன் வளர்ப்பு மகளின் அலங்கோலத்தைப் பார்த்துவிட்டு, அய்யோ தெய்வமே என்று தலையிலடித்துக்கொண்டு அழுதாள். கூப்பாடு போட்டு ஊரைக் கூட்டிவிட்டாள். பஞ்சாயத்துப் பேசி முடித்து ஊக்காலில் விழவைத்தனர் இருவரையும். அபராதத் தொகை வசூலித்து ஊர் பொது நிதியோடு சேர்த்துக்கொண்டனர்.” (வதம். ப. 52)

பெண்ணைக் கற்பழித்து விட்ட நபர்களுக்கு ஊர்க்காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால் எவ்வாறு சரியாகும். பெண்ணிற்கு எத்தகைய கொடுமைகள் நேர்ந்தாலும் தண்டனையினையும் ஆண்களே கொடுத்துக்கொள்கின்றனர். ஒரு பெண்ணைக் கெடுத்தவனுக்கு இதுதான் ஊர் பெரியவர் வழங்கும் தண்டனையா.

அதேபோல ’பாஞ்சாலி’ என்னும் சிறுகதையும் அமைந்திருக்கிறது. கற்பனைக் கதபாத்திரங்களாகப் படைக்காமல் உண்மைப் பாத்திரங்களாகவே இருக்கின்றன. எதார்த்தமான வாழ்வியல் சூழலில் மனிதர்கள் சக மனிதர்களுக்கு நிகழ்த்தும் வன்முறைகள் ஏராளம் என்பதையே இவ்வகைப் படைப்புகளில் காண முடிகிறது. பெண் தனக்குப் பிடித்தவனுடன் வாழ நினைத்து வாழ முடியாமல் போனதனை இச்சிறுகதை எடுத்துக்கூறுகிறது. இதே ஆண்களாக இருந்தால் அவர்கள் விரும்பியவரைத் திருமணம் செய்துகொள்ள இச்சமூகம் சம்மதம் தெரிவிக்கும். ஆனால், பெண்ணிற்கு இத்தகைய சுதந்திரம் வழங்கப்படவில்லை என்பதனை இச்சிறுகதை வாயிலாக அறிய முடிகிறது. சமூகத்தில் நடக்கும் உண்மைகளினை இப்புதினம் படம்பிடித்துக் காண்பிக்கிறது.

ஈரம் சிறுகதையில் பெண்ணின் வாழ்வியல் சிக்கல்கள்

என்னதான் பெண்கள் வேலை செய்து பொருளீட்டினாலும், அது அவர்களுக்கானதாக இருப்பதில்லை. என்பதனைத் தமது படைப்பில் பதிவு செய்துள்ளார் சு.தமிழ்ச்செல்வி.

ஆண் இல்லாத குடும்பத்தில் அக்குடும்பத்தின் மொத்தச் சுமையும் அக்குடும்பத்தில் இருக்கும் பெண்ணையே சென்றடைகிறது. ஈரம் சிறுகதையில் வரும் வேதாம்பாள் என்ற பெண்ணின் கணவன் வெளிநாட்டிற்குச் சென்று சம்பாதித்து வருவதாகக் கூறிச் சென்றவன் திரும்பி வரவேயில்லை. எனவே அக்குடும்பத்தில் உள்ள தேவைகள் அனைத்தினையும் நிறைவேற்றக் கூடிய பொறுப்பு அனைத்தும் வேதாம்பாளுடையதாக மாறுகிறது. அவள் தனது மகளைக் கூலி வேலை செய்து காப்பாற்றுகிறாள். இது சமூகத்தில் நிகழும் எதார்த்த சூழ்நிலையாகும் இதனைத் தமது சிறுகதையில் எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

“ஆத்திரத்தில் ஏதேதோ பேசியபடி கொஞ்ச தூரம் நடந்தாள் வேதாம்பாள். நாலு பேரு காது கேக்க மட்டரகமாக பேசிப்புட்டமே நம்மபுள்ளய என்ற வருத்தம் ஏற்பட்டது அவளுக்கு. பாவம் சின்னஞ்செரிசி. வயத்துக்கு பத்தலன்னா கேட்டுச்சி? பறக்குற தலய ஒதுக்கிக் கட்டத்தான் கேட்டுச்சி. பெத்த புள்ளக்கி தாயாருந்து அதக்கொட செய்யாம வாயிக்கி வந்தமேரி பேசிப்புட்டமே என்று மகளின் மீது அனுதாபப்பட்டாள். (ஈரம். ப. 29).

தன்னிடம் வருமானம் இல்லையே என்று எண்ணினாலும் தன்னுடைய குழந்தை கேட்டு இல்லையே என்ற வருத்தம் அவளுக்கு இருந்தது இதன் மூலம் அறிய முடிகிறது. வேதாம்பாள் தனது மகள் கேட்ட உடனே வாங்கிக் கொடுத்து இருப்பாள். வேலை செய்த இடத்தில் கொடுக்கவில்லை என்பதால் வாங்கிக் கொடுக்க முடியாமல் இருந்தது. தனது கோபம் முழுவது தனது முதலாளி மேலே தான் இருந்தது என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது.

யாதார்த்தம் சிறுகதையில் பெண்ணியச் சிக்கல்கள்

உடல்நிலை சரியில்லாத போது மருத்துவ மனைக்குச் சென்று தங்களது உடல் உபாதைகளைப் போக்கிக்கொள்வது மரபு. கணவன் இல்லாத பெண்கள் தங்களது குழந்தைகளுக்கு உடல் நிலை சரியில்லாத போது பணத்திற்காக எவ்வாறெல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பதனை யாதார்த்தம் என்ற சிறுகதை விளக்கிச் செல்கின்றது. நோய் என்பது எதிர் பாராமல் வருவது. அச்சமயத்தில் கஷ்டப்படக்கூடிய குடும்பத்தினர் உடனே பணம் திரட்ட முடியாத சூழல் ஏற்படுவது யதார்த்தம். இத்தகைய யதார்த்த சூழலைத் தமது படைப்பில் யதார்த்தமாகவே கொடுத்துள்ளார்.

கண்ணமாவின் மகன் மாரியப்பன் உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறான். நடவு வேலைக்குச் சென்று வீடு திரும்பிய கண்ணம்மா மகனின் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதைப் பார்த்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறாள். அங்கு மகன் இறந்துவிட்ட பின்பு அவனைக் காரில் கொண்டு செல்ல பொருளாதர வசதி இல்லாமல், அவன் உறங்குவதைப் போலத் தனது மடியில் வைத்துக் கொண்டு பயணம் செய்கிறாள். வறுமையின் சூழலால் தனது அழுகையினை அடக்கிக் கொண்டு பேருந்தில் ஏறினாலும் தன்னை மறந்து அழுதுவிடுகிறாள். நடத்துனர்

அவர்களை இடையில் இறக்கி விடுகின்றனர். பெண்ணிடம் பொருளாதரம் இல்லை என்றால் எவ்வாறெல்லாம் பாதிப்பிற்கு உள்ளாகிறாள் என்பதனை இச்சிறுகதை வெளிப்படுத்துகிறது.

“ஆஸ்பத்திரிக்கிப் பெயிட்டு வந்து நடவுக்குப் பெயிரலாம்”

“அது எப்படிப் போகமுடியும்? பத்து மணிக்குத்தான் ஆஸ்பத்திரியே தொறப்பாவோ. பண ஆஸ்பத்திரின்னா எந்த நேரமுன்னாலும் பார்க்கலாம். காசில்லாம ஊசி போடணுமின்னாக்கா காத்துக்கிட்டுத்தான் கெடக்கணும்.”

வருசமெல்லாமா வேல இருக்கு? இந்த நடவு நாளுல ஓடுனாத்தான் ரெண்டுகாசு பாக்க முடியும்” (யதார்த்தம். ப. 35)

எனக் கேட்பதில் இருந்து பெண்கள் கடின உழைப்பின் மூலமே தங்களது தேவைகளை நிவர்த்தி செய்து வந்தனர் என்பது புலப்படுகிறது. தங்களது கணவன்மார்களின் சம்பாத்தியத்தினை எதிர்பார்க்காமல் வாழக் கற்றுக்கொண்டுள்ளனர் என்பது இக்கதையின் மூலம் வெளிப்படுகிறது.

முடிவுகள்

- பெண்களே பெண்களை இழிவுபடுத்துதல் என்பது சூழ்நிலையாக இருந்தாலும் கிராமத்தில் இருக்கும் பெண்கள் தங்களது இயல்பான போக்கினை வெளிப்படுத்தும் சூழலை அறிந்துகொள்ள முடிகிறது.
- ஆண் சமூகமானது பெண்களை ஒரு காமப் பொருளாகப் பார்ப்பதனையே காண முடிகிறது.
- திருமணத்திற்கு முன்பு பெண்ணிற்கு ஆசை வார்த்தை கூறி காதலித்து கற்பமாக்கி விட்டு பின்பு அவளுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனக் கூறுவது பெண்களை எச்சரிக்கும் முறையில் அமைந்துள்ளது.
- தாலி கட்டிய மனைவி வீட்டில் இருந்த போதும் வேறு ஒரு பெண்ணை மணம் முடித்து வருதல் என்பது ஆண்களை யாரும் கேட்க முடியாது என்ற ஆணாதிக்க சமூகத்தின் உச்ச நிலையினை அறிய முடிகிறது.
- பெண் கல்வி கற்க ஆசைப்பட்டலும் அதனைப் பெண்களே தடுத்தல் என்பது தனது சுயநலத்தால் பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்பது போல இருப்பதனை அறிய முடிகிறது.
- ஆண்கள் குடித்துவிட்டு தன்னை எவ்வளவுதான் கொடுமைப்படுத்தினாலும் அவர்களைத் தட்டிக் கேட்காமல் இருப்பதும், ஒருவிதமான பெண்ணடிமைத்தன ஆணாதிக்க சமூகத்தின் நிலை இருப்பதனை அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

தமிழ்ச்செல்வி, சு. (2023). சு. தமிழ்ச்செல்வி சிறுகதைகள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

துணைமை ஆதாரங்கள்

References

எங்கெல்ஸ், பிரெடெரிக். (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம். முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ.

சண்முகசுந்தரம், சு. (2000). பெண்ணியம் (ஆய்வுக் கட்டுரைகள்). காவ்யா பதிப்பகம், திருநெல்வேலி.

பிரேமா, இரா. (2008). பெண் எழுத்துக்களின் அரசியல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

முத்து சிதம்பரம். (2005). பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும். முத்துப் பதிப்பகம், சென்னை.

ரெங்கம்மாள், இரா., மற்றும் சி. வாசுகி. (2005). பெண்ணியம்: அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடுகளும். அறிவுப் பதிப்பகம், சென்னை.